**இபலோகம பிரதேச சபை**
**அநுராதபுரமாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பானகணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இபலோகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதானகருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நீதிமன்றதண்டப்பணவருமானம் ரூபா 4,819,476 ஆக இருந்தபோதும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 4,498,934 எனக் காண்பிக்கப்பட்டமையால் வருமானம் ரூபா 320,542 ஆக குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 10 வியாபார இடங்களை குத்தகைக்கு வழங்கியமைக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,550,095 தொகையான வருமானம், வருமான செலவினக் கணக்கில் ரூபா 1,430,095 எனகுறிப்பிடப்பட்டமையால் வருமானம் ரூபா 120,000 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிட்குரிய ரூபா 883,550 ஆன வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர வருமானம், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 894,550 என குறிப்பிடப்பட்டமையால் வருமானம் ரூபா 11,000 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்காக ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு செலவினம் ரூபா 255,736 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 234,779 ஆக குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக ஆண்டின் செலவினம் ரூபா 20,957 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 40,888,592 கிரயத்திலான புறதெரும கட்டிடம் ரூபா 34,755,303 என கணக்கீடுசெய்த காரணத்தினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கு ரூபா 6,133,289 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2017 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமாணம் ரூபா 4,651,950 இணங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 பெறவேண்டியமற்றும் செலுத்தவேண்டியகணக்குகள்**

---

**(அ) பெறவேண்டியகணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல உள்ளவாறு 06 மாதங்கள் முதல் 94 மாதங்கள் வரையான காலப்பகுதிகளுக்காக 147 இடங்களிலிருந்து கிடைக்க வேண்டிய கழிவுப் பொருள் வருமானம் ரூபா 374,362 ஆக இருந்தது.

(ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 30 கடைகளிலிருந்து 03 மாதங்கள் முதல் 78 மாதங்கள் வரையான காலப்பகுதிகளுக்காக கிடைக்கவேண்டிய கடைவாடகை ரூபா 79,430 ஆக இருந்தது.

(iii) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 72 செயற்திட்டங்களுக்காக கிடைக்கவேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 34,750,912 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 92 செயற்திட்டங்களுக்காக ரூபா 37,014,374 கூட்டுத்தொகை செலுத்த வேண்டியதாக இருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கானசான்றுகள் இன்மை**

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 269,369,103 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் மெய்மையாய்வு முடியாதிருந்தன.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானகங்ளுடன் இணக்கமின்மைகள்**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காதசந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் முதலியவற்றுடனானதொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி, நிர்வாகம்) 59 ஆம் விதி | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள நிர்மாண வேலைகள் மற்றும் வியாபார தொடர்பாக வருடாந்தம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்கதிறைசேரிச் சுற்றறிக்கை | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்கபொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

1.3.4.2 **வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

2006 இன் 12 ஆம் இலக்கமுத்திரைக் கட்டண விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஒக்தோபர், நவம்பர் காலப்பகுதியில் தொலைபேசி கோபுர வருமானங்கள் அறவிடும் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 18,300 ஆன முத்திரைவரி 2018 யூலை 31 ஆந் திகதி வரை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**02. நிதிமீளாய்வு**

**2.1 நிதிவிளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,119,589 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,778,852 ஆக இருந்தது.

## 2.2 வருமானநிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

(அ) மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017இல் பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 நிலுவையில் பெறுமதி | 2017பட்டியலிடப்பட்ட தொகையில் பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கடைவாடகை | 135,121 | 1,647,80 | 85,780 | 914,740 | 79,430 |
| கழிவுப்பொருள் வரி | 339,500 | 1,333,457 | 107,450 | 1,137,300 | 428,207 |
| வாடகைக்கு வழங்கல் )கேள்வி( | 297,900 | 1,430,095 | 174,033 | 1,315,464 | 69,202 |
| நீதிமன்ற தண்டம் | 3,720,731 | 4,498,934 | 3,042,572 | - | 5,386,180 |
| முத்திரைக் கட்டணங்கள் | 1,867,211 | 1,150,000 | 1,867,211 | 779,499 | 370,501 |
| கைத்தொழில் வரி | - | 140,800 | - | 140,800 | - |
| வியாபாரவரி )சில்லறை வருமானம்( | - | 163,250 | - | 163,250 | - |
| வியாபார வரி | - | 105,250 | - | 615,050 | - |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 105,250 | - | 105,250 | - |
| மொத்தம் | 6,360,463 | 10,574,216 | 5,277,046 | 5,171,353 | 6,333,520 |

**2.2.2 வீதவரி**

1987 இன் 15 ஆம் இலக்கபிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் ரணஜயபுர முப்படை இராணுவ நகர தொகுதி அதிகாரப் பிரதேசம் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடப்பட்டுள்ள போதிலும் அமைந்துள்ள அசையாத ஆதனங்களின் குறிப்பான வருடாந்த பெறுமதி அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 குத்தகைவாடகை**

2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் வரையான காலப்பகுதிக்குரிய 03 வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 93,177 ஆன வருடாந்த குத்தகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 முத்திரைகட்டணங்கள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை முத்திரைவரி வருமானம் ரூபா 370,501 ஆக இருந்தது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா5,386,180 ஆக இருந்தது.

**3. செயற்பாட்டுமீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவதுபிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம்,மக்கள் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுவீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பிளிசறுபிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த பிரதேச அதிகார பிரதேசத்தில் கழிவுப் பொருள் சேகரிக்கப்பட்டு கொம்போஸ்ட் உரம் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அப் பிரிவில் இருந்து ரூபா 158,500 ஆன வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. விற்பனை அல்லது கொம்போஸ்ட் உற்பத்திற்கு பயன்படுத்தப்படாத பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் போன்ற திண்மக் கழிவுப் பொருட்கள் எரித்தல் அல்லது புதைத்தமையால் சுற்றாடலுக்கும் சுகாதாரத்திற்கும் பாதகமான நடைமுறையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்த ிநோக்கங்களை அடைந்துகொள்ளல்**

ஐக்கியநாடுகள் அமைப்பின் நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

(அ) சபைக்குரிய ஹிரிப்பிட்டியாகம, மஹ இலுப்பள்ளம,ரனஜயபுரஆகிய இடங்களில் அமைந்துள்ளபொதுமலசல கூடங்கள் மற்றும் ரனஜயபுரவாரச் சந்தைகட்டிடம் நிதிக் கூற்றுக்களில் நிலையானசொத்துக்களாகவெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 687,000 கிரயமான டிராக்டரொன்றும் 2 நீர் பௌசர்களும் பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய சபையில் சேவை புரிந்து சேவையை விட்டுச் சென்ற, இடமாற்றம் பெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,500 ஆன ஊழியர் கடன் 2018 ஆகஸ்ட் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.4. செயற்பாட்டு வினைத்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 53 கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்குரிய உடன்படிக்கை 1992 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அவற்றை திருத்தம் செய்து உடன்படிக்கைகளை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் 02 இடங்களில் 46 கடைகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கடை அறை வாடகை பதிவேட்டின் பிரகாரம் அவ்வாறான 2 இடங்களில் உள்ள 32 கடைகளிலிருந்து மாத்திரம் வாடகை அறவிடப்பட்டிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்றமற்றும் குறைபயன்பாட்டுசொத்துக்கள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா2,150,800 தொகையான வாகன மற்றும் இயந்திர உபகரணங்கள் போன்றவை வருடக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டில் இரண்டுகுத்தகையாளர்களால் உடன்படிக்கை செய்யப்பட்ட குத்தகையில் ரூபா 120,000 தொகையை மதஸ்தாபனமொன்று நேரடியாக செலுத்தி எஞ்சியவற்றை சபை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.7 இனங்காணப்பட்டநட்டங்கள்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் 02 இடங்களில் அமைந்துள்ள 19 கடைகளிலிருந்தும் 23ஆண்டுகளை விஞ்சிய காலப்பகுதிமுதல் வாடகை அறவிடப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 1,457,000 ஆன நிதி நட்டம் சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

2015 மார்ச் 18 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் நேரடியாக பொறுப்புக் கூறவேண்டிய உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வுமற்றும் முகாமைத்துவகுழுக்கள்**

---

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாகபேணப்படாமை. |
| (ஆ) நிலையான சொத்துக்கள் | i சகல சொத்துக்களும் பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை<br>ii ஆதனங்களுக்குரிய உரித்து கையளிக்கப்படாமை<br>iii. பொருள் மெய்மையாய்வு சபை முன்மொழிவு செயற்படுத்தப்படாமை |
| (இ) வருமான நிர்வாகம் | i ஆதனங்கள் மதிப்பீடுசெய்யப்படாமை<br>ii நிலுவை வருமான சேகரிப்பு செயற்திறனாக இல்லாமை<br>iii. வருமான உத்தியோகத்தரின் வேலை மேற்பார்வை செய்யப்படாமை |
| (ஈ) உள்ளகக கட்டுப்பாடு | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை |